# வாக்கியம் அமைத்தல்

## (மு-மே வார்த்தைகள்)

1.முகம்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

2. முத்தம்

குழந்தை அம்மாவுக்கு முத்தம் கொடுத்தது.

3. முத்து

தூத்துக்குடி கடலில் முத்து எடுப்பர்.

4. முரசு

அக்காலத்தில் முரசு அடித்து செய்திகளைத் தெரிவிப்பர்.

**5. முக்கியம்**

**நம் வாழ்வதற்கு முக்கியமானவை உணவு, உடை மற்றும் உறைவிடம்.**

**6. முட்டை**

**கோழி முட்டை இட்டது.**

**7. முயற்சி**

**வருண் முயற்சி செய்ததால் வெற்றி பெற்றான்.**

**8. முயல்**

**முயல் ஆமையிடம் தோற்றது.**

9. முடிவு

**தேர்தல் முடிவுகள் நாளை வெளியிடப்படும்.**

10. முதலை

**முதலை வாயைத் திறந்து தூங்கும்**

11. மூட்டை

**தருண் நெல் மூட்டையை விற்றான்.**

12. மூளை

**போதைப் பொருட்களை உட்கொண்டால் மூளை பாதிக்கும்.**

13. மூன்று

Notebook Writer

தேர்வு மூன்று மணி நேரம் நடைப்பெறும்.

14. மெத்தை

கட்டிலுக்கு மெத்தை வாங்க வேண்டும்.

15. மெட்டி

மெட்டியில் சலங்கை பொருத்தப்பட்டுள்ளது.

16. மெய் எழுத்து

மெய் எழுத்துக்கள் மொத்தம் பதினெட்டு.

17. மேகம்

மழை பெய்யும் முன் மேகம் கருப்பாகும்.

18. மேடு

சாலை மேடு பள்ளமாக உள்ளது.

19. மேடை

வேதா மேடையில் பாடினாள்.

20. மேற்கு

சூரியன் மேற்கில் மறையும்.

Notebook Writer Notebook Writer Notebook Writer